2019 ஜூலை 10]

என்று அறிவுறுத்துகிறோம். உடனடியாக 'அந்தப் புகார் எப்பொழுது வந்தது? எப்பொழுது அந்தப் பழுது நீக்கப்பட்டது?' என்பதையெல்லாம் பதிவு செய்யும் பேரேடு வைத்திருக்கின்றோம். ஆக, இந்தப் பணிகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். அரசின் நிதி நிலைமையையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அடுத்ததாக, WhatsApp calls*–எல்லாம் வைத்திருக்கின்றோம். இன்னும் எந்தளவிற்கு சேவைகளை வழங்க முடியுமோ அந்தளவிற்கு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

பாதாள சாக்கடைத் திட்டம்

***6502—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டி பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் வெளியேறும் கழிவு நீர் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக,

கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில், ஒட்டன்சத்திரத்திற்கு அடுத்தபடியாக இருக்கும் மிகப் பெரிய பேரூராட்சி சின்னாளப்பட்டி பேரூராட்சியாகும். அது 24 பேரூராட்சிகளில் வளர்ந்து வருகின்ற ஒரு பேரூராட்சி. மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து, குடியிருப்புப் பகுதிகளெல்லாம் விரிவாக்கம் ஆகியிருக்கின்றன. விரிவாக்கம் ஆனதோடு மட்டுமல்ல; வடக்குத் தெரு, சிக்கனம்பட்டி மற்றும் காந்தி கிராமத்திற்கு எதிரே உள்ள சத்யா நகர் உள்ளிட்ட பகுதிகளிலெல்லாம், மழை பெய்கின்றபோது, தண்ணீர் முழுமையாக அங்கு தேங்கி, அப்பகுதி மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

முற்பகல் 10—20

இது மட்டுமல்லாது; இன்றைக்கு சின்னாளப்பட்டி பேரூராட்சியைப் பொறுத்தவரையில், மேலக்கோட்டை, காந்தி கிராமம், இராமநாதபுரம் மற்றும் சுற்றியிருக்கின்ற கிராமங்களை எல்லாம் இதோடு இணைக்கக்கூடிய அளவில் மக்கள் தொகை பெருகி, குடியிருப்புகளும் வளர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு மழை பெய்தாலும், வடக்குத் தெரு, சிக்கனம்பட்டி பகுதிகளில் நீர் தேங்கி நின்று, தொற்று நோய் பரவக்கூடிய நிலை இருக்கிறது. எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற எங்களுடைய கழகத் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள், நகராட்சிக்கு மட்டுமல்லாமல், பேரூராட்சிக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று இந்தச் சட்டமன்றப் பேரவையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் வாக்குறுதியைத் தந்தார்கள். ஆகவே, எங்கள் கழகத் தலைவர், அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டில் பெரும்பாலான நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் எடுக்கப்பட்டது. அந்த வகையில், திண்டுக்கல்லில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேறுவதற்கும்

உதவியாக இருந்தார்கள். இன்றைக்கு பேரூராட்சிப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சொன்னார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரூராட்சிகளுக்கும் அதை விரிவுபடுத்துகின்ற வகையில், சின்னாளப்பட்டியிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருவாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அவர் அமைச்சராக இருந்தவர். பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, சுத்திகரிப்புப் பணிகளுக்கான இடத்தைத் தேர்வு செய்யும்போது, மிகப் பெரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இடம் தேர்வு செய்யும்போது, அந்தப் பகுதி மக்கள், 'எங்கள் பகுதியில் அதை அமைக்க வேண்டாம்; வேறு பகுதிகளில் சுத்திகரிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும்' என்று எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இதுபோன்று மக்களிடமிருந்து அனைத்து இடங்களிலும் எதிர்ப்பு வருவதன் காரணமாக அதைக் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவிற்கிணங்க கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டி பேரூராட்சியில், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 26,255 ஆகும். சின்னாளப்பட்டி பேரூராட்சியில் உள்ள மக்கள் தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீரின் அடிப்படையில், உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கின்றபட்சத்தில், நமது தமிழகத்தில் இருக்கின்ற

500—க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளிலும் அதை மேற்கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக, சின்னாளப்பட்டி பேரூராட்சியில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதேபோன்று, சின்னாளப்பட்டியைச் சுற்றி 100 கிராமங்களுக்கும் மேல் இருக்கின்றன. அனைத்து மக்களும் எரி தகன மேடைக்குச் செல்ல வேண்டுமென்றால், திண்டுக்கல் மாவட்டத்திற்குத்தான் செல்ல வேண்டும். ஏழை எளிய மக்கள் சென்று வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சின்னாளப்பட்டியில் ஒரு எரி தகன மேடை அமைத்தால், சுற்றியிருக்கின்ற 100 கிராம மக்கள் அதைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட நிலையினை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின்மூலம் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும்கூட, தொகுதி மக்களின்மேல் உள்ள அக்கறையினால் கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, முன்னுரிமையின் அடிப்படையில் எரி தகன மேடை கண்டிப்பாக அமைத்துத் தரப்படும். தற்போதும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில்கூட அதற்குரிய நடவடிக்கையை எடுக்கச் சொல்லி அம்மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பரமசிவம் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு கட்டடப் பணிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதையும் எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளோம். முன்னுரிமை அடிப்படையில், விரைவாக ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

2019 ஜூலை 10]

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊர் ஆகும். அதேபோன்று, தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் காரணமாக இருந்த தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் பிறந்த ஊராகும். அந்த விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ரூ.28 கோடி நிதியில், 72 கி.மீ. தூரத்திற்கான பணிகள் 3 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் மற்றும் இரண்டாம் சிப்பமாக கழிவுநீர் செல்லக்கூடிய குழாய்கள் பதிக்கக்கூடிய பணிகளும், அதேபோன்று 3,000 புதைகுழாய்கள் அமைக்கும் பணிகளும், சிப்பம் 3–ல் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக்கூடிய பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 13 வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளிலே 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்ற நிலையில், இன்னும் 20 சதவிகிதப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. இந்தத் திட்டப் பகுதியில் இருக்கக்கூடிய பணிகளில் மூன்று கிலோ மீட்டர் தூரம் இன்னும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.*

முற்பகல் 10–25

அதேபோன்று, விருதுநகரில் 12,000 குடியிருப்புகளுக்கு இந்த பாதாள சாக்கடைத் திட்டத்திலே இணைப்பைக் கொடுக்க வேண்டும். ஆனால், இதுவரை 5,000 குடியிருப்புகளுக்குத்தான் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள 7,000 குடியிருப்புகளுக்கு இன்னும் இணைப்புகள் கொடுக்காத காரணத்தால், கழிவுநீர் அனைத்தும் திறந்தவெளி வாய்க்காலில் சென்று கொண்டிருக்கின்றது. இந்த வாய்க்காலில் செல்கின்ற கழிவுநீர் அனைத்தும் கவுசிகா நதியில் சென்று, அருகில் இருக்கின்ற குல்லூர்சந்தை dam*–லே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, என்னுடைய அறையில் வந்து நீங்கள் கேட்டபோதே, 'சுருக்கமாகக் கேள்வியைக் கேட்க வேண்டும்' என்று நான் சொன்னேன். நீங்கள் பெரிய உரையை ஆற்றுவதுபோல் விரிவாகப் பேசினால் எப்படி? சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *கழிவு நீரெல்லாம் கவுசிகா நதியில் சென்று அருகில் இருக்கக்கூடிய* dam*–ல் கலக்கிறது.*

அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தப் பணிகள் நடைபெறும்போது, பணிகள் நடைபெறுவதற்கு ஏதுவாக, அங்கு dummy அமைக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றன. பணிகள் முடிவடைந்த நிலையிலும், அந்த dummy–ஐ அகற்றாத காரணத்தினால், கழிவு நீர் செல்லக்கூடிய வாய்க்காலிலே உள்ள கழிவு நீரெல்லாம் அந்தத் தொட்டிகள் வழியாக வெளியிலே வந்துவிடுகிறது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே, பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்களும் சரி, அதேபோன்று, விருதுநகருக்கு வரக்கூடிய அனைத்து பொது மக்களும் சிரமப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகளையெல்லாம் விரைந்து முடித்துக் கொடுத்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சூழ்நிலையிலே குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது. ஆனால், அருகில் குல்லூர்சந்தை Dam இருக்கிறது. இந்தக் கழிவு நீரெல்லாம் அங்கே போய்ச் சேருகிறது. Dam–ல் அதிகமான அளவில் தண்ணீர் இருக்கின்றது. இந்தக் கழிவு நீரெல்லாம் அதில் கலக்காமல் இருந்திருந்தால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குறைகளையெல்லாம் போக்கி, இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்குள்ள மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விருதுநகர் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். இந்தத் திட்டத்திற்கு 19–10–2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. திருத்திய ஒப்புதல் 28–2–2011–ல் ரூ.27.85 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்நகராட்சி 36 வார்டுகளைக் கொண்டுள்ளது. அந்த 36 வார்டுகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

2019 ஜூலை 10]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், சிப்பம் 1, 2 மற்றும் 3 எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூறியிருக்கிறார். மீதமுள்ள 20 சதவிகிதப் பணிகளும் வேகமாக முடிக்கப்படும். அதேபோல, 93,000 மக்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள். மொத்தம் 12,000 வீட்டு இணைப்புகள் கொடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதிலே 5,228 இணைப்புகளை நாங்கள் கொடுத்திருக்கிறோம். மீதமுள்ளவற்றிற்கும் இணைப்புகள் வேகமாகக் கொடுக்கப்படும்.

மேலும், கம்பிகள் வெளியே நீட்டிக்கொண்டிருக்கின்றன என்றும் சொன்னார். துறை அதிகாரிகளிடம் இதுகுறித்து தெரிவித்து, அவற்றை அகற்ற கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, அங்கு Dam*–ல் கழிவுநீர் கலப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுத்திகரிப்பு திட்டங்களை இன்றைக்குப் போட்டிருக்கிறார்கள். எனவே, கண்டிப்பாக அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும் சரி; குடிநீர்த் திட்டங்களாக இருந்தாலும் சரி; pipeline *கொடுக்கும்போது, நம்முடைய அரசாங்க செலவிலேயே வீடுகளுக்கான இணைப்பைக் கொடுத்து விடுகிறோம். இதுபோன்றுதான் இனிமேல் வரக்கூடிய திட்டங்களையும் நாங்கள் செயல்படுத்தவிருக்கிறோம். பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், வீடுகளுக்கான இணைப்பிற்காக நாம் ஒவ்வொரு வீடாகத் தோண்டும்போது,* road damage *ஆகும்; மேலும் அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஒரு* scheme *முடிந்தால் 7, 8, அல்லது 10 வருடங்கள் ஆகும். நாம் திட்டம் போடும்போதே, வீட்டு இணைப்பைக் கொடுத்துவிடுகிறோம். அப்படி வீட்டு இணைப்புகளைக் கொடுக்கின்றபோது, அதற்கான தொகையைக்கூட, அவர்கள்* House tax *கட்டும்போது 3 வருடங்கள், 5 வருடங்களில் பிரித்து வாங்கிக்கொள்கிறோம்.*

இந்தத் திட்டம் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. நாம்தான் தற்போது கொடுத்திருக்கிறோம். எனவே, இனிமேல் அதுபோன்ற நிலைமை இருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகராட்சி என்பது வளர்ந்துவரக்கூடிய ஒரு நகராட்சி. சுமார் 50,000–க்கும் மேற்பட்ட மக்கள் அங்கே வசித்து வருகிறார்கள். தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரம் நகரிலே அமைந்திருக்கிறது. அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு பேரூராட்சிப் பகுதிகளில் எல்லாம் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். ஒட்டன்சத்திரம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு போதுமான நிலம் தேவைப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த நிலத்தைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற காலத்திலே ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு முன்னுரிமை கொடுத்து, பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

அதேபோன்று, ஒட்டன்சத்திரம் நகராட்சி, 1974 ஆம் ஆண்டு பேரூராட்சியாக இருந்த சமயத்திலே போடப்பட்ட பகிர்மானக் குழாய்கள் எல்லாம் இப்போது பழுதடைந்துவிட்டன. அதுவும் குறிப்பாக, 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிதான் இருக்கிறது. எனவே, ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கென்று தனி கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டுவந்து, கூடுதலாக மேல்நிலைத் தொட்டிக் கட்டுவதற்கும், ஏற்கெனவே, 1974 ஆம் ஆண்டில் போடப்பட்ட பகிர்மானக் குழாய்களையெல்லாம் மாற்றுவதற்கும், அரசு முன்வருமா? அந்த நகராட்சிக்கென்று புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டுவருவதற்கு முயற்சி எடுப்பார்களா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் *2* கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதேபோல அத்திட்டம் கொண்டுவருவதற்கு STP போடுவதற்கு நிலம் தேர்வு செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நிலம் தேர்வு செய்து தரும்பட்சத்தில், துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்படும். அதேபோல, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் குழாய்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற விஷயம் உண்மையாகவே நிறைய இடத்தில் இருக்கின்றன. *20* வருடங்கள், *30* வருடங்களாக அந்தப் பகிர்மானக் குழாய்கள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை போடப்பட்டு *40* வருடங்கள், *45* வருடங்கள் ஆகிவிட்டன என்று அதிகமாகக்கூடச் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு துறையின் சார்பில் இதைக் கொண்டு சென்றிருக்கிறோம். இதற்கென தனியாக நிதி ஒதுக்கப்பட்டு, பழுதடைந்துள்ள குழாய்களையெல்லாம் மாற்றுகின்றபட்சத்தில் தண்ணீர் சேதாரம் தடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, அதற்கென்று தனியாக ஒரு திட்டம் போட்டு, *30* வருடங்கள், *25* வருடங்களான இடங்களில், எங்கெங்கு அதிகமாக சேதாரம் ஏற்பட்டிருக்கிறதோ, அந்த இடங்களிலெல்லாம் அந்தக் குழாய்களை மாற்றுவதற்கு திட்டங்கள் தயார் செய்துகொண்டிருக்கிறோம். அந்த வகையில் கண்டிப்பாக இந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*